# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2
Date : 25.04.2024
Case No. : O.S. 1/2023
Nationality : Indian
Name : சுதாகர்(கிராம நிர்வாக அலுவலர், திருபுவனம்)
Religion :
Age : 39
Father's/Husband's Name :
Village :
Taluk :

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் வாசாஆ 1 ஆவணம் சர்வே நோட்டீஸ் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஒரு நபருக்கு பட்டா கொடுக்கப்படுவதற்கு முன்பு வழங்கப்படும் 19 நோட்டீஸ் என்றால் சரிதான். மேற்படி சர்வே நோட்டீஸில் முதல் பக்கத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாசாஆ 1 சிட்டா மற்றும் சாசாஆ 2 அடங்கல் ஆவணங்கள் 1990 ஆண்டிற்கு பிறகு எங்கள் அலுவலத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நான் எடுத்து வந்துள்ள அசல் பதிவேடுகளில் அந்த பதிவேடுகள் எந்த ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ள பதிவேடுகள் அனைத்தும் அசல் பதிவேட்டின் நகல் என்றால் அசல் பதிவேடுகள் சேதம் அடைந்துவிட்டதால் அதிலிருந்து நகல் எடுத்து பராமரித்து வருகிறோம். நான் நத்தம் சிட்டா அடங்கல் பதிவேட்டினை எடுத்து வந்துள்ளேன் என்றால் சரிதான். புஞ்சை நிலத்திற்கு அ பதிவேடு

உள்ளதா என்றால் உள்ளது. சாசாஆ 2 அடங்கல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய புல எண் 79/4 ல் கண்ட சொத்திற்கான அ பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது. அது எந்த வருடத்திற்கான அ பதிவேடு என்றால் 1980 ஆண்டிற்கு பிறகு உள்ள அ பதிவேடு ஆகும். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். தற்போது அந்த பதிவேட்டினை எடுத்து வந்துள்ளேன். நான் எடுத்து வந்துள்ள அ பதிவேட்டில் புல எண் 79/4 உள்ள பக்கம் இல்லை.

2. புல எண் 647/22 நத்தம் வகைபாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். புல எண் 647/22 க்கான இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட புல வரைபடத்தை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் புல வரைபடத்தைதான் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வோம் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்திற்கு பிறகு பட்டா வழுங்கப்பட்டதா என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு அறிவிப்பு கொடுக்கப்பட்டாலே தோராய பட்டா வழுங்கப்பட்டுவிடும். சர்வே நோட்டீஸில் -குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணம்தான் பட்டாவில் குறிப்பிடப்படவேண்டும் என்று கட்டாயம் இல்லை என்றால் சரிதான்.

3. நான் தாவா சொத்தினை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். தாவா சொத்தினை கடைசியாக எப்போது அளவீடு செய்தார்கள் என்பது குறித்த விவரங்கள் ஏதும் எங்கள் அலுவலக பதிவேட்டில் உள்ளதா என்றால் அளவீடு செய்யவில்லை. ஒருமுறை அளவீடு செய்ய முயன்றபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது. புல எண் 79/4 நத்தமாக வகைபாடு செய்யப்பட்டு புல எண் 647/22 என்று எப்போது வகைபாடு செய்யப்பட்டது என்ற விவரம் நான் எடுத்துவந்துள்ள பதிவேட்டில்லை இல்லை என்றால் சரிதான். தவறாக நத்தம் பட்டா வழுங்கபட்டிருந்தால் அதனை ரத்து செய்வதற்கு வருவாய் கோட்டாட்சியருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு பக்கத்தில் திருபுவனம்

கம்பகரஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சொத்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் சர்வே எண் 647/20 என்றால் சரிதான்.

4. சாசாஆ 3 வரைபடத்தில் கண்டவாறு உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்புள்ள புல வரைபடம் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் நில அளவையர் அலுவலகத்தில்தான் கேட்க வேண்டும். புல எண் 647/22 ல் 5-1/2 ஏர்ஸ் விஸ்தீரணத்தில் வாதிகள் குடியிருந்து வருகிறார்களா என்பது குறித்து அந்த சொத்தினை அளந்து பார்த்தால்தான் தெரிய வரும் என்றால் சரிதான். நத்தம் பட்டா அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் பட்டா என்றால் சரிதான். புல எண் 647/19 யார் பெயரில் உள்ளது என்றால் சர்க்கார் புறம்போக்கு சாலையாக உள்ளது. புல எண் 647/22 ல் கண்ட சொத்திற்கு ஜானகிராமன் இறந்துவிட்டதால் அவர்கள் வாரிசுகள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்..

5. மேற்படி பட்டா மாறுதல் ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் சிட்டா, அடங்கல் நகல் வழங்கப்படும்போது அதில் மனு எண் குறிப்பிட்டு வழங்கப்படும் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வாசாஆ 2 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிட்டா, அடங்கல் ஆவணத்தில் ந.க. எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.